# உலகத் தமிழர் பேரவை

**உடனடி வெளியீட்டுக்குரியது**

**செய்தி அறிக்கை - செய்தி அறிக்கை - செய்தி அறிக்கை**

## உலகத் தமிழர் பேரவையின் பார்வையில் சிறீலங்காத் தேர்தல் சிறீலங்காவின் அரசியல் முறையில் தமிழருக்கு நம்பிக்கை இல்லை என்பதனைக் குறைந்தளவிலான வாக்களிப்பு எடுத்துக்காட்டுகின்றது

இலண்டன்- ஏப்பிரல் 24, 2010 - ஏப்பிரல் 8 அன்று சிறீலங்காவில் நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலானது அத்தீவில் வாழும் தமிழ்ப்பேசும் மக்கள் மீது திணிக்கப்பட்ட ஒரு தேர்தலாகவே உலகத் தமிழர் பேரவை நோக்குகின்றது. இராணுவமயமாக்கப்பட்டு ஒடுக்குமுறையின் கீழ் வாழும் தமிழ் மக்கள் பல்வகைச் சொல்லொணாத் துயர்களுக்கு நடுவில் வாழ்க்கைக்குத் தேவையான அடிப்படைகளற்ற நிலையில் சுதந்திரம் மறுக்கப்பட்டு அச்சுறுத்தல்களுக்கிடையே தொடர்ந்தும் வாழ்கின்றனர். 100,000 வரையான தமிழர் இன்னமும் இராணுவ வதை முகாம்களில் உரிமைகள் மறுக்கப்பட்ட நிலையில் வாழ்கின்றனர். ஆயிரக்கணக்கான தமிழருக்கு இத்தேர்தலில் வாக்களிக்கும் உரிமை மறுக்கப்பட்டுள்ளது.

இத்தேர்தலில் மிகக் குறைவானவர்களே வாக்களித்து உள்ளமையானது அச்சம், நம்பிக்கையின்மை, தேர்தல் மீதான வெறுப்பு ஆகிய மிகத் தெளிவான காரணங்களையும் சிறீலங்காவில் நடைமுறைப் படுத்தப்படுகின்ற பெரும்பான்மை இனம்சார்ந்த மக்களாட்சி முறையிலும் அதன் தேர்தல் முறையிலும் அவர்களுக்கு சிறிதளவும் நம்பிக்கையில்லை என்ற செய்தியை அனைத்துலகச் சமூகத்துக்குக் தெளிவாகக் தந்துள்ளது. சிறீலங்கா அரசானது அங்கு நடப்பது மக்களாட்சியேயென நியாயப்படுத்தி அனைத்துலகச் சமூகத்தை ஏமாற்றும் பொருட்டே அடக்குமுறையும் இராணுவ ஆக்கிரமிப்புமுள்ள இச்சூழலில் இத்தேர்தலைத் தமிழ் மக்கள் மீது திணித்துள்ளது.

எனினும், இத்தேர்தலிற் பங்குபற்றிய தமிழ் மக்கள் அவர்களது நியாயமான அரசியல் வேட்கைகளுக்காகக் குரல்கொடுத்து வருகின்ற அரசியற் கட்சியான தமிழர் தேசியக் கூட்டமைப்பைத் தெரிவுசெய்துள்ளனர். தெரிவுசெய்யப்பட்ட த.தே.கூட்டமைப்பு உறுப்பினருக்கு வாழ்த்துத் தெரிவிக்கையில் உலகத் தமிழர் பேரவைத் தலைவராகிய வண. முனைவர் எஸ்.ஜெ. இமானுவேல் அடிகளார் பின்வருமாறு கூறியுள்ளார்: “தமிழ் மக்கள் இத்தேர்தல் மூலம் இரண்டு செய்திகளைத் செம்மையாகத் தெரிவித்துள்ளனர்: ஒன்று, தம்மீது திணிக்கப்பட்ட சிறிலங்காவின் அரசியல் முறையில் தமக்கு நம்பிக்கையில்லை என்பது. மற்றையது, தமது விடுதலைக்காகக் குரல் கொடுத்த கட்சியைத் தெரிவு செய்ததன் மூலம் தமது விடுதலை வேட்கையை வெளிப்படுத்தியுள்ளது.” மேலும், “தமிழரது அன்றாடத் தேவைகளை நிறைவு செய்வதிலும் அவர்களது அரசியல் வேட்கைகளை வென்றெடுப்பதிலும் த.தே. கூட்டணியுடன் உலகத் தமிழர் பேரவையானது நெருக்கமாக இணைந்து செயற்படும்” எனவும் அவர் கூறினார்.

# உலகத் தமிழர் பேரவை

இத்தேர்தல் ஏற்படுத்தியிருக்கக் கூடிய வேற்றுமைகளை மறந்து விடுதலை என்ற பொது நோக்கை எய்த அனைத்துத் தமிழரும் ஒன்றுபட வேண்டுமென உலகத் தமிழர் பேரவை வேண்டிக்கொள்கின்றது. அத்தோடு, இலங்கைத் தீவிலுள்ள மக்கள் அனைவரும் சுதந்திரத்துடனும் மேன்மையுடனும் அமைதியாக அருகருகே வாழ வழிசெய்யும் வகையில், புலம் பெயர்ந்து வாழும் அனைத்துத் தமிழரும் அவர்களது அமைப்புகளும் ஒற்றுமையோடு ஒன்றுசேர்ந்து அனைத்துலக நிறுவனங்களுடனும் அரசுகளுடனும் ஈடுபட்டு ஓர் அரசியல் தீர்வைக் காணச் செயலாற்ற வேண்டுமெனவும் உலகத் தமிழர் பேரவை வேண்டிக்கொள்கின்றது.

நிறைவுபெற்றது


**ஊடகத் தொடர்பு:**

தொ.பே. + 44 (0) 7958 590 196
மின்னஞ்சல்: surensurendiran@globaltamilforum.org


**ஆசிரியர் குழுக் குறிப்பு:**

உலகத் தமிழர் பேரவையானது உலகளாவிய தமிழ் அமைப்புகளின் ஒரு கூட்டமைப்பாகும். பேரவை உறுப்பினர், நலன் விரும்பிகள் ஆகியோரினதும் அனைத்துலக அரசுகள், நிறுவனங்கள், அமைப்புகள் ஆகியவற்றிலுள்ள முக்கிய முடிவெடுப்பவர்கள் ஆகியோரினதும் அறிவையும் திறமைகளையும் ஒன்று திரட்டி, சிறீலங்காவில் இன்னலுறும் தமிழரது துயர்போக்கவும் அவர்களது தன்னாட்சி உரிமையை முன்னெடுப்பதற்கு அனைத்துலகச் சட்டங்கள், அவற்றின் கூட்டு ஒப்பந்தங்கள், பொதுவிணக்க ஒப்பந்தங்கள் ஆகியவற்றிலுள்ள மக்களாட்சிக்குரிய சட்ட வரம்புகளுக்கமைய உழைத்து வருகின்றது. இப்பேரவை 2009 இல் அனைத்துலகத் தமிழ்ச் சமூக அமைப்புகளின் உதவியோடு தொடங்கப்பட்டது. எமது நோக்கம் மற்றும் குறிக்கோள் ஆகியனவற்றை அறியத் தயவுசெய்து info@globaltamilforum.org உடன் தொடர்புகொள்ளவும் அல்லது www.globaltamilforum.org ஐ பார்க்கவும்.